விநாயகர் துணை



யாழ்ப்பாணம்

உரும்பிராய் தெற்கைச் சேர்ந்தவரும்

கோப்பாய் வடக்கை வசிப்பிடமாகக் கொண்டவருமான

அமரர்

# இராசரத்தினம் சற்குணபாலன்

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்



27-02-1996

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

# இராசரத்தினம் சற்குணபாலன்

(நீர்ப்பம்பி இணைப்பாளர் சவூதி அரேபியா)



தோற்றம் 03-05-1949     மறைவு 28-01-1996

## திதி வெண்பா

பவவாண்டு தைத்திங்கள் பூர்வத்து நவமியதைச்
சிவனாரின் சேவடிதான் சேரவென சுபமாகச்
சற்குண பாலனாம் சால்புறு சீலனவன்
இற்றரையிற் நேர்ந்தான் இனிது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# தோத்திரத் திரட்டு

## திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

திருக்கச்சியேகம்பம் பண்: தக்கேசி

ஆலந்தான் உகந்து அமுது செய்தானை
ஆதியை அமரர் தொழுதேத்தும்
சீலந்தான் பெரிதும் உடையானைச்
சிந்திப்பார் அவர் சிந்தை உளானை
ஏலவார் குழலாள் உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
காலகாலனைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே

## திருவாசகம்

கண்களிரண்டும் அவன் கழல் கண்டு
களிப்பனவாகாதே
காரிகையார்கள் தம் வாழ்வில் என் வாழ்வு
கடைப்படுமாகாதே
மண்களில் வந்து பிறந்திடுமாறும்
மறந்திடுமாகாதே
மாலறியா மலர்ப்பாதமிரண்டும்
வளங்குதுமாகாதே
பண்களி கூர்தரு பாடலொடாடல்
பயின்றிடுமாகாதே
பாண்டி நல் நாடுடையான் படை
ஆட்சிகள் பாடுதுமாகாதே
விண்களி கூர்வதோர் வேதகம்வந்து
வெளிப்படுமாகாதே
மீன்வலை வீசிய கானகன் வந்து
வெளிப்படுமாயிடிலே

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கை
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்டுள்ளம்
குளிரவே கண்கள் ஒளிர்ந்தனவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு
பெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழற
உழறி உமை மணவாளனுக்காள்
பாரும் விசும்பும் அறியும்
பரிசு நாம் பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்
பின்னும் வேண்டுகிறார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண் டேல்
உன்னை யென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்
நான் மகிழ்ந்துபாடி
அறவா நீ ஆடும் போதுன் அடியின்கீழ்
இருக்க என்றார்

## திருப்புகழ்

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடிக்
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தக ஞான சத்திநிபாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வளாது பெய்க மலிவளஞ் சுரக்கமன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நானமறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## அமரர்

# இராசரத்தினம் சற்குணபாலன் அவர்களின் வாழ்க்கை வரலாறு

நீர்வள நிலவளம் நிறைந்த தென்கோவை இருபாலைப் பதியில் வேளிர்குல திலகர் கதிரித்தம்பி இராசரத்தினம் - சரஸ்வதி அம்மா தம்பதியினர் செய்த தவப்பயனபால் வந்துதித்த தலைமகனே அமரர் சற்குணபாலன் ஆவார். இவர் 1949ம் ஆண்டு வைகாசி மாதம் 3ந் திகதி அவதரித்தபோது அன்னை தந்தையர் அளவற்ற மகிழ்ச்சியடைந்தவுடன் தமது புத்திரனின் நல்ல குணத்தை முன்கூட்டியே உணர்ந்துப் பொருத்தமான பெயரையும் இட்டனர்.

தவப்புதல்வனாம் தலைமகனுககுச் சகோதரர்களாக வந்துதித்தனர் மூவர் காலஞ்சென்ற ரேணுகாதேவி மற்றும் இந்திரவேணஜினி (ஆசிரியை இராமநாதன் மகளிர் கல்லூரி கொழும்பு) சிவமோகனபாலன் (சுவிற்சலாந்து) ஆகியோரே அமரரின் சகோதரர்களாக அமையும்பேறு பெற்றவர்கள்

சற்குணபாலன் சிறுவயதிலிருந்தே தனது பெயருக்கேற்ற சற்குணவானாக நற்குண நற்செய்கைகளுடன் கூடிய பாலனாகப் பள்ளிப் பருவமடைந்தார். துள்ளித்திரிந்தபருவத்தில் பள்ளிப்படிப்பை நாடவே பெற்றார். அவரைக் கோப்பாய் ம. வி.ல் சேர்ப்பித்தனர். ஆரம்பக் கல்வியை நன்றே கற்று வந்த அன்னாரை அவரின் தாய்மாமன் இராசதுரை என்பவர் தமது குடும்பம் கொழும்பு சென்றவேளை பிரிய மனமின்றித் தம்முடன் அழைத்துச் சென்று பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியிலும் தொடர்ந்து தொழில் நுட்பக்கல்லூரியிலும் பயில வைத்துத் தொழிற் கல்வி பெறவைத்தார்.

அமரர் அவர்கள் தம் சகோதரர்கள் இல்லறவாழ்வில் தம்முடன் இணைந்து கொண்டவர்களான திரு சர்வேஸ்வரன் (முகாமையாளர்-கந்தளாய் சீனித்தொழிற்சாலைக் கூட்டுத்தாபனம்) நாகேஸ்வரி (ஆசிரியையாகக் கடமையாற்றி தற்பொழுது சுவிற்சலாந்து) ஆகியோருடனும் தமது பெற்றார், சகோதரர், உற்றார், உறவினருடனும் குறிப்பாக மாமனார் இராசதுரை குடும்பத்தவருடனும் இணைபிரியாப் பாசத்துடனும் வாழ்ந்து வந்தார். சகோதரியின் மகன் ராஜ்சங்கர் பெற்ற தாய் தந்தையைவிட மேலான பாசத்தை இவரிடம் கொள்ளும் வகையில் அன்பாகநடந்து கொண்டார். சுவிஸில் வாழும் பெறா

மகன் சாவித்திரியனைக் காணாமலே பாசம் வைத்தார். உரும்பிராய் உடன்பிறவாச் சகோதரர் ஸ்ரீகுமார், அவர் துணைவி புஷ்பவதி பிள்ளைகளான சிவகஜனி, ராமதரணி, சதாநந்தினி ஆகியோரை அன்பினால் அரவணைத்தார். தொழில்வாய்ப்பு அவரைச் சவுதி அரேபியாவுக்கு அழைத்தபோது குடும்பத்தினரைப் பிரியமனமின்றியிருப்பினும் அவர்களை நன்கு மேம்படுத்தும் நோக்கில் புறப்பட்டுச் சென்றார்.

தனது தளரா முயற்சியால் உரும்பிராய் தெற்கில் தாமெல்லாம் வாழப் பெருமனையொன்றை அமைப்பித்தார். பெற்றாரும் சகோதரரும் அவருக்குத் தகுந்த வாழ்க்கைத் துணைதேடி இணைக்க விரும்பினர். வடகோவைப்பதியில் வாழ்ந்த கந்தையா - நாகம்மா ஆசிரியத் தம்பதியினரின் இளையபுதல்வி ஜெயமணி (ஆசிரியை கோப்பாய் நாவலர் வித்தியாலயம்) என்பவர் இவருக்குத் துணையாகும் பேறு பெற்றார். துணைவியார் வழியில் மைத்துனிமாராகப் பெற்ற தவமணி (யா/ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி புத்தூர்) யோகமணி, மனோன்மணி (கோப்பாய் நாவலர் வித்தியாலயம்) சகோதரராகப் பெற்ற இராஜேஸ்வரன் (கட்டிடத் திணைக்களம் மட்டக்களப்பு) தர்மரட்ணம் (அஞ்சல் அலுவலகம் உரும்பிராய்) பெறாமகளாகப் பெற்ற கிரிசாந்தா ஆகியோரையும் தன் உடன் பிறந்தோர் போன்றும் பிள்ளைபோன்றும் மிகுந்த அன்புடனும் பாசத்துடனும் அணைத்து வாழ்ந்தார்.

சற்குணபாலனுக்கேற்ற சற்குணவதியாக இல்லறவாழ்வில் குறைவின்றி வள்ளுவன் வாய்மொழிக்கமைந்த மனைத்தக்க மாண்புடையவளாக அமைந்தார். புதுமனையில் குறையேதுமின்றி வாழ்ந்த தம்பதியரை வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஒரு சிறிது காலம் பிரித்ததே தவிர, அவர்கள் பிரிந்துவாழ்ந்தது கிடையாது. கொழும்பிலும் கோப்பாயிலும், உரும்பராயிலுமாக இவர்களை இணைந்தே எவரும் காண்பதல்லாது தனித்துக் காண்பதில்லை.

திரு சற்குணபாலன் உறவினருடன் அளவளாவுவதில் இன்பங் காண்பவர். இடம் பெயர்ந்த நிலையில் இத்தம்பதியர்க்கு சகோதரரான திரு இ. ஜெயானந்தனின் (யாழ் பல்கலைக்கழகம்) இல்லம் கைகொடுத்து உதவியது.

அங்கு ஓய்வு பெற்ற ஆசிரியத் தம்பதியினர் திரு நல்லையா குடும்பத்தினருடன் கூடி இருந்து குசலம் விசாரிப்பவரான சற்குணபாலன் தனது மன உளைவுகளை இத்தம்பதியினருடன் கலந்து பேசி ஆறுதல் பெற்றதுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம் பெயர்ந்த இடர்வேளையிலும் இணைந்தே இறுதிவரை எப்போதும் செல்வர். இத்தம்பதியினரைக் காண காலனுக்கும் பொறுக்கவில்லைப்போலும் தைமாதம் 28ந் திகதி இரவு 9.15 மணி வரை சாதாரணமாக இருந்த அவரை எதுவித ஆரவாரமோ, கஷ்டமோ இன்றி கடிதே கவர்ந்து விட்டான் துணைவியும் துடித்து நிற்க சுற்றமும் கலங்கியது - ஆயின் கதை முடிந்து விட்டது தன் சொந்தக் குடும்பத்தினருக்கு மாத்திரமன்றி, எவர்க்குமே எப்பொழுதும் எங்கும் உறுதுணையாக விளங்கிய சான்றோன் சற்குணபாலன் இவ்வுலகில் தன்பணியை முடித்துவிட்டான்.

பாலன் தம்பதியர்க்கு ஊன்றுகோல்போல் உதவி வந்தவர் மாமனாரான செ. இராசலிங்கம் (ஓய்வு பெற்ற நீதிமன்றப் பதிவாளர்) அவர்கள். திருவாளர் அருளம்பலம் (ஓய்வு பெற்ற வங்கி ஊழியர்) அவர்கள். இவர்களது தேவைகளை தேவையானபோது நிறைவேற்றியவர். இவர்களும் ஏனையோரும் திரு சற்குணபாலன் அவர்களது தீக்கடன், நீர்க்கடன் யாவும் செவ்வனே நடைபெற உழைத்த உழைப்பு மகத்தானது.

நல்லவர்கள் நெடுநாள் வாழ்வதில்லை என்பது பொய்யாகி விடவில்லைப்போலும் காலனின் கொடுமைகண்டு கலங்காதார் யாருமில்லை எனலாம் பாவும் தலைவிதிவசம் என்று தேறுதல் கொள்வதேயன்றி வேறு எதுவும் செய்வதற்கில்லை. அன்னாரின் ஆன்மா இறைவன் இணையடியில் சாந்தி பெறட்டும் எனப்போம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ ஆறாத்துயரங்கள் ★

### மனைவி

அம்மியும் மிதித்து அருந்ததியும் காட்டி நின்று
இம்மை மறுமையிலும் பிரியேன் நானென்ற சொல்லும்
பொய்யாகிப் போனதுவே பொறுக்குதில்லை யேநெஞ்சம்
ஐயாவே என்நாதா! ஆறிடும் வழி அறியேனே!

''கண்ணீரே சிந்தாதே கவலையேன் நானிருக்கக்
'குஞ்சு' தான் நீ யெனக்குக் குறையேது மில்லையென்றீர்!
குறைவழியிற் பிரிந்தீரே! எப்பிறப்பிற் காண்பேனோ
குறைவின்றிக் கண்ணீரரய்ப் பெருகுதே என்னுதிரம்.

### சகோதரி, சகோதரன்

தூரத்தே யிருந்தாலும் துணையெமக்காய் இருந்தீரண்ணா
பாரத்தை மனதில்தந்தெம் பாசத்தை மறந்தோடி
அப்பாவை அம்மாவை அணைத்திடவே சென்றீரோ
எப்போது மனம்வைத்தீர் எமையெல்லாம் பிரியவென்று

### உடன் பிறவாச் சகோதரர்

அன்பினால் ஆட்கொண்ட அருஞ்சோ தரனேயுன்
இன்மொழியும் இன்முகமும் இனியென்று காண்போமோ
உன்றுணை வாடிடவும் உதவிட நாமாற்றோம்
என்றுதான் ஆறிடுமோ எம்மனத் துயரந்தானே.

### மைத்துனிமார், மைத்துனர்

மஞ்சளும் குங்குமமும் மகிழ்வுடன் கொடுத்துநின்று
'குஞ்சு' தான் எம்தங்கை குறைவழி இழக்கவைத்தீர்!
நெஞ்சம் உருகுகின்றாள் நெடுந்தூரம் சென்றீரே
விஞ்சிடும் வெந்துயரால் வேகுதே எம்நெஞ்சம்!

மைத்துனர் தானெனினும் மகிழ்ந்தேயுடன் பிறப்பாய்
எத்தனை தூரமுற்ற போதுமெமைச் சிந்தித்து
அத்தனை தேவையையும் ஆய்ந்தறிந்து செய்தீரே
இத்தனையும் மறப்போமா இனியெங்கு காண்போமா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமகன்

பெற்றார்போல் எனையணைத்துப் பேணியஎன் மாமாவே
சுற்றாமல் போய்விட்டீர் சுமக்கின்றோம் வேதனையை
என்மாமா சடுதியிலே ஏன்சென்றீர் எங்குற்றீர்
சொன்னாலும் புரியாதென் சோர்வொடு துயரந்தான்

## பெறாமகன்

''உன்கண்ணில் நீர்வழிந்தால் என்நெஞ்சுதிரம் சொட்டு மென்ற
என்னன்புச் சித்தப்பா நீர் சென்றவழி புரியுதில்லை
என்னையும் ஊக்குவித்த இன்முகத்தீர் எங்குற்றீர்!
மின்னாமல் முழங்காமல் இடிவந்து வீழ்ந்ததுவே!

## உறவினர்கள்

தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளனாய்த்
தரணியில் வாழ்ந்த தம்பியே 'பாலன்' நீ
நின்னருந் துணையுடன் சோதரர் சோர்ந்திட
என்னே சென்றிட்டீர் நிம்மதி இழந்தோமே!

## தேற்றம்

ஆண்டாண்டு காலம் நாம் அழுதழுது நின்றிடினும்
மாண்டார் மீண்டகதை மாநிலத்தில் இல்லையேயால்
வேண்டாம் நெஞ்சங்காள் வேறுவழி யாமறியோம்
காண்போம் கணவனமதி கழலடியைத் தான் பணிந்து

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ கிருஸ்ண கவசம்

அகர முதலே அழியாப்பொருளே
ஆயர் குலமே நேயர் கரமே
இகரம் பரமும் இணையுமிடமே
ஈதல் மரபாம் இதயத் தவமே
உலகக் குடையே உயிரின் கலையே
ஊதும் குழலுள் உயிரின் கலையே
எரியும் கனலில் தெரியும் புனலே
ஏழை மனதில் வாழும் அருளே
ஐயம் தீர்க்கும் அறவுக் கதிரே
ஐவர் துணையே அன்புச் சிலையே
ஒளியே விழியே உயிரே வழியே
ஓடும் நதியில் பாடும் அலையே
தல்லல் வுலகை ஆக்கும் நிலையே
அடியேன் சரணம் சரணம் சரணம்!
அறமே அறமே அறமே அறமே
திறமே திறமே திறமே திறமே
தவமே தவமே தவமே தவமே
வரமே வரமே வரமே வரமே
வேதம் விளையும் வித்தே விளைவே
நாதம் பொழியும் நலமே நலமே
ஓதும் பொழுதே உடனே வருவாய்
உள்ளம் கேட்கும் வெள்ளம் தருவாய்
அறியாக் கவலை அதிகம் அதிகம்
அருள்வாய் அருள்வாய் கவசம் கவசம்
பொய்யா மொழியே பொங்கும் நிலவே
பூமிக் குடையின் காவற் பொருளே
பார்த்தன் பணியும் பாதம் காக்க
பாஞ்ச சன்னியம் பக்தனை காக்க
மூடர்கள் தமையும் மோகனன் காக்க
முள்ளில் மலராய் முளைத்தோன் காக்க
வாடும் உயிரை மன்னவன் காக்க
தேடும் விழியைத் திருமால் காக்க
கேளிப் பொருளைக் கிருஷ்ணன் காக்க
கண்ணீர் நதியைக் கண்ணன் காக்க
துன்பம் என்றொரு சுமையைத் தீர்க்க
தூயோன் வருக துணையே தருக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதர் கற்பும் மடவார் நோன்பும்
மாயோன் காக்க மலைபோல் வருக!
தகிடத் தகிடத் தகிடத் தகவென
தறிபடு துன்பம் தறிகெட ஓட
தகிடத் தகிடத் தகிடத் தகிடத்
திசைவரு கவலை பசைஇல தாக
துருவத் துருவத் துருவத் துருவிடத்
தொலையாப் பொருளே அலையாய் வருக
நிஷ்காமத்தில் நிறைவோன் வருக
கர்மசந் யாசக் களமே வருக
ஞானம் யோகம் நல்குவன் வருக
நல்லோர் வாழ்வில் நலமே நிறைக!
அடியேன் துயரம் அதிகம் அதிகம்
அருள்வாய் அருள்வாய் கவசம் கவசம்
பொங்கும் வேலும் புண்ணாக் காது
பொருந்தும் துயரம் பொடிபடு மாறு
தாங்கும் தலைவன் தாமரைக் கண்ணன்
தாளில் விழுந்தேன் சரணம் சரணம்
மதுசூ தனனே மனிதன் சரணம்
இருடீ கேசா இயலான் சரணம்
கீதா சாரிய கிருஷ்ணா சரணம்
வேதா சாரிய வேந்தே சரணம்
தேவக மைந்தா சிறியேன் சரணம்
யசோத குமரா அடியேன் சரணம்
உன்னை விட்டொரு உறவுகளில்லை
என்னை விட்டொரு நண்பர்களில்லை
நன்மையில் உன்போல் நாயகனில்லை
எங்கெங்கே நான் இருந்திடும் போதும்
அங்கங்கே நீ அருள் செயவருக
கோசலை ஈன்ற குமரா வருக
கோதையின் மாலை கொண்டவன் வருக
ரகுவம்சத்தின் நாயகன் வருக
யதுவம் சத்தின் யாதவம் வருக
மதுவை வென்ற மாதவன் வருக
மலைக்குடி கொண்ட மாதவன் வருக
திருப்பதியாளும் திருமால் வருக
திருவரங்கத்துப் பெருமாள் வருக
இராவணன் கொடுமை தீர்த்தாய்; துன்பம்
'இரா'வணம் எமக்கு இன்னருள் புரிக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்சன் கொடுமை களைந்தோய் வருக
காலனை வெல்லக வைலி தருக!
நெற்றியில் திருமண் நெஞ்சில் வைரம்
காதில் குண்டலம் கையில் வில்லொடு
தண்டைக் காலில் சலங்கை குலுங்க
அண்டையில் வந்து அருளே புரிக!
கௌரவர் தம்மைக் களத்தில் வென்றாய்
கௌரவம் காக்கக் கண்ணா வருக!
பார்த்தன் மகிழப் பாடம் சொன்னாய்
படித்தவன் மகிழப் பரமே வருக!
மூன்று குணங்கள் முறையாய்க் கூறிய
சான்றோன் பாதம் தாவி யணைத்தேன்
சிக்கென உன்னைச் சேர்த்துப் பிடித்தேன்
பக்கென உந்தன் பாதம் பற்றினேன்
கொக்கென நின்று குறிவைத் திருந்தேன்
அக்கணம் வந்தாய் அடியில் விழுந்தேன்
இக்கணம் என்னை ஏங்க விடாமல்
தக்கவ னேநீ தயவுடன் அருள்வாய்!
கல்லாய்ப் போனவள் காலடி பட்டு
பெண்ணாய் ஆனது பிழையே அன்று
உன்னால் தானே உலகம் இயக்கம்
கண்ணனிலாமல் கடலவான் ஏது
கண்ணனிலாமல் கடவுளு மில்லை
கண்ணனில்லாமல் கவிதையு மில்லை
கண்ணனில்லாமல் காலமு மில்லை
கண்ணனில்லாமல் காற்றே இல்லை
எத்தனை பிறவி எத்தனை பிறவி
அத்தனை பிறவியும் அடியேன் கொண்டால்
சத்தியநாதன் தாள்களை மறவேன்
தத்துவக் கண்ண னை தனிமுகம் மறவேன்
உன்னை நம்பி உனையே சேர்ந்தால்
பிறவிகளிலை நீ பேசிய பேச்சு
உலகில் போதும் ஒருமுறை மூச்சு
உன்னிடம் சேர்த்து உன்வடி வாக்கு
இங்கே நாங்கள் இருக்கும் வரையில்
சங்கு முழங்கு தர்மம் நிலைக்க
பிள்ளைகள் வாழ்க்கை பிழையாகாமல்
மனையவள் வாழ்க்கை மாண்பு கெடாமல்
இல்லை என்றொரு நாளில்லாமல்
இன்னும் என்னும் ஆசை வராமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொல்லை யென்பது துளியுமிலாமல்
தொற்றும் நோய்கள் பற்றி விடாமல்
படுக்கையில் விழுந்து பரிதவிக்காமல்
சிந்தனை கெட்டு திறமையும் கெட்டு
நிந்தனை பெற்று நீங்கிவிடாமல்
என்றும் பதினாறிளமை வழங்கு
இப்பணி தொடர அற்புதங் காட்டு
தளரா மேனியில் சக்தியைக் கூட்டு
தாய்போலிருந்து சாதம் ஊட்டு
வாழ்ந்தால் இப்படி வாழ்வது நன்றென
ஊரார்க்கென்னை உதாரணம் காட்டு
உலகில் ஒருவன் உத்தமன் இவனென
உயிர்கள் பேசிடும் ஒருநிலை கூட்டு
சிறியவர் பெரியவர் வறியவர் செல்வர்
சரிசரி சரியெனத் தலையை யசைக்க
பொலி பொலி பொலியெனப் புகழும் விளங்க
மள மள மளவென மனையிருள் நீங்க
கல கல கலவென காசுகள் சேர
தள தள தளவெனத் தர்மந்தழைக்க
வர வர வாய்ப்புகள் வாய்க்க
ரகுபதி பசுபதி நன்மைகள் அருள்க
ஐயா சரணம் சரணம் சரணம்!
அடியேன் வாழ்வில் நீயே கவசம்
கவசம் கவசம் கவசம் கவசம்
வந்தது வாழ்வில் மன்னன் கவசம்
கவசம் கவசம் கவசம் கவசம்
வாழ்க்கை என்றும் கோபுரக் கவசம்
அரிஓம் அரிஓம் அரிஓம் அரிஓம்
அவனே துணையென அறிவோம் அறிவோம்!
அரிஓம் அரிஓம் அரிஓம் அரிஓம்
அவனிடம் எதையும் தருவோம் தருவோம்!
ஜெய ஜெய ராமா ஜெய ஜெய கிருஷ்ணா
ஜெய ஜெய ஜெய ஜெய ஜெயஜெய ஜெயஜெய
ஜெயஜெய ஜெயஜெய ஜெயஜெய ஜெயஜெய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமது அன்புத் தெய்வம் காலமான செய்தி கேட்டு; பல வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும், மரணச் சடங்கில் கலந்து எமக்கு ஆறுதலும், அநுதாபமும் தெரிவித்து எங்கள் துயரைப் பகிர்ந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் இன்று 27 02 1996ல் நடைபெறும் ஆத்ம சாந்திக்கிரியைகளில் பங்கு கொண்ட அனைவர்க்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தற்போதைய முகவரி:
கைதடி - நுணாவில்
சாவகச்சேரி

திருமதி ஜெயமணி சற்குண
பாலனும (மனைவி)
குடும்பத்தினரும்
கோப்பாய் வடக்கு
கோப்பாய்.

சிவா அச்சகம் - கைதடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org